# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 385 /பேரூ/2025**
**நாள் : 08.04.2026**

M.S. சேஷாத்ரி,
ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.S. சேஷாத்ரி என்பவரது 11.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2025 அன்று பெறப்பட்டு, 385/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 11.10.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"ஆரணி பேரூராட்சியில் சர்வே எண். 252/2 குளம் வகைப்பாட்டில் புதிதாக ஆக்கிரமித்து கட்டியுள்ள கழிவறைகளையும், கழிவுநீர் தொட்டிகளையும் அகற்ற வேண்டி அனைத்து துறை சார்ந்த அலுவலகங்களிலும் மற்றும் முதலமைச்சரின் தனிபிரிவிலும் தொடர்ந்து மனுக்கள் செய்ததின் அடிப்படையில் பொன்னேரி வட்டாட்சியர் ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி 13.07.2023 அன்று கடிதம் வாயிலாக ஆணையிட்டார். பின்னர் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் 27.07.2023 அன்று காலை 10.00 மணிக்கு ஆக்கிரமிப்பை அகற்ற நாள் குறித்தார். குறித்த நேரத்தில் கலைஞரின் மகளிர் உரிமை தொகை வழங்கும் பணிகள் நடைபெற்றதினால் ஆக்கிரமிப்பை அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் நான் தொடர்ந்து மனுக்கள் அளித்ததினால் மீண்டும் பொன்னேரி வட்டாட்சியர் அவர்கள் 04.07.2025 அன்று ஆரணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு கடிதம் வாயிலாக ஆணை பிறப்பித்திருந்தார்.

அந்த மனுவினை வழங்கி சுமார் மூன்று மாதங்கள் கடந்தும் ஆரணி பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்கள் ஆக்கிரமிப்பினை அகற்ற காலம் தாழ்த்தி வருகிறார். எனவே நீர்நிலையான குளத்தை மீட்கவும் உரிய துறை சார் செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தீர்வுகாண வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 06.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரரான திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 252/2-ல் குளம் வகைப்பாட்டில் அமைந்துள்ள இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து புதிதாக கழிவறைகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளை கட்டியுள்ளனர்.
- மேற்காணும் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டுமானங்களை அகற்றிட கோரி புகார் மனு அளித்ததில், பொன்னேரி வட்டாட்சியரின் 13.07.2023 நாளிட்ட கடிதத்தில் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறு ஆரணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.
- 13.07.2023 நாளிட்ட பொன்னேரி வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய கடிதத்தின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலர் 27.07.2023 அன்று ஆக்கிரமிப்பினை அகற்றிட காலை 10.00 மணியளவில் நாள் குறித்திருந்தார். குறிப்பிட்ட நாளில் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் பணிகள் இருப்பதினால் ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளை வேறு ஒரு தேதிக்கு அப்பணிகளை செய்து முடிப்பதாக பொன்னேரி வட்டாட்சியர் செயல் அலுவலருக்கு கடிதம் வாயிலாக தெரிவித்திருந்தார்.
- மேலும் ஆக்கிரமிப்பினை அகற்றாமல் காலம் தாழ்த்தியதால், மீண்டும் புகார் மனுக்கள் சமர்ப்பித்ததின் அடிப்படையில், பொன்னேரி வட்டாட்சியர் 04.07.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் ஆக்கிரமிப்பை அகற்றிட பேரூராட்சி செயல் அலுவலரை மீண்டும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.
- இந்நிலையில் இன்று வரை மேற்காணும் குளம் வகைப்பாட்டிலுள்ள ஆக்கிரமிப்புகளை பேரூராட்சி செயல் அலுவலரால் அகற்றப்படாமல் இருப்பதால், இக்குளத்தில் பள்ளி நிர்வாகத்தினர் தொடர்ந்து கற்றுகள்களையும், குப்பைகளையும் கொட்டி குளத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமின்றி மீதமுள்ள குளத்தையும் மதில் சுவர் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே பொதுமக்களுக்கு

மட்டுமின்றி அனைத்து உயிரினங்களுக்கும் நீர் ஆதாரமாக விளங்கும் இந்த குளத்தை மீட்கவும், தடை மனுக்களை மீறி புதிதாக கட்டப்பட்டுள்ள கழிவறைகளையும், கழிவுநீர் தொட்டிகளையும் அகற்றிடவும் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளாத பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 252/2ஆனது இப்பேரூராட்சி மன்றத்தால் 23.11.1990-ல் நடைபெற்ற பொருள் எண். 68-ல் பள்ளிக்கு தேவையான மனை நிலம் பேரூராட்சிக்கு சொந்தமான சர்வே எண். 252-ல் உள்ள நக்கலக்குண்டா (நரிக்குளம்) என்ற புறம்போக்கு நிலத்தில் 1.43 ஏக்கரில் உள்ளதை மேற்படி பள்ளிக்கு ஒதுக்கீடு தரும்படி கேட்டு மேற்படி பள்ளியின் அமைப்புக் குழு செயலர் அவர்களின் 18.10.1990-ல் குறிப்பிட்ட கடிதம் பார்வையிட்டு முடிவு செய்தல் என தீர்மானம் கொண்டுவரப்பட்டு seen and sanctioned என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இது குறித்து முறைமன்ற நடுவர் அவர்களால் கீழ்க்காணும் வினா எழுப்பப்பட்டது. பொன்னேரி வட்டாட்சியர் அவர்களால் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 13.07.2023 மற்றும் 04.07.2025 ஆகிய கடிதங்கள் மூலம் ஆக்கிரமிப்பு அகற்ற ஆணையிடப்பட்டதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து விபரம் என்ன என கேட்கப்பட்டதற்கு 1990-ஆம் ஆண்டு மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு 02.03.2026 நாளிட்ட ந.க. எண். 55/2026/அ1ல் தனது விளக்கத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் சர்வே எண். 252ல் விஸ்தீரணம் 1.43 ஏக்கர் நிலத்தினை இப்பேரூராட்சி மன்ற தனது தீர்மானம் எண். 68 நாள் 23.11.1990-ல் ஆரணி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மொத்தம் 1800 மாணவ மாணவியர் படிப்பதாகவம், தற்போதுள்ள பள்ளி மனையில் அளவு சுமார் 4.50 ஏக்கர் மட்டும் உள்ளது என்றும், நாளடைவில் மாணவ மாணவியரின் எண்ணிக்கை கூடுதலாகி கொண்டே வருவதால் இடம் பிரச்சினை தோன்ற ஏதுவாக உள்ளது என்றும், இதை கருத்திற்கொண்டு மகளிர்க்கென்றே தனியாக உயர்நிலைப்பள்ளி நிறுவ அமைக்க அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டு, அரசும் கொள்கை ரீதியில் ஒப்புக்கொண்டு, முறையான படிவத்தில் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக முறையாக உரிய படிவத்தில் விண்ணப்பிக்கப்பட்டு, மேற்படி உயர்நிலை பள்ளிக்கு தேவையான நிலம் இப்பேரூராட்சிக்கு சொந்தமான சர்வே எண். 252-ல் நக்கலகுண்டா (நரிக்குளம்) என்ற புறம்போக்கு வகைப்பாடு நிலத்தில் 1.43 ஏக்கர் நிலத்தை மேற்படி பள்ளிக்கு ஒதுக்கிக் கொடுக்க இப்பேரூராட்சி மன்றம் தனது தீர்மானத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு 14.12.1990 நாளில் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த இடத்தின் ஒரு பகுதியில் நபார்டு திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறையின் மூலம் மாற்றுத்திறனாளி மாணவிகளுக்கான கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி இடம் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 14.12.1990 அன்று மகளிர் மேல்நிலை பள்ளிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுவிட்டதாலும், மேற்படி இடத்தில் பொதுப்பணித் துறை மூலம் நபார்டு திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் மாணவிகளுக்கான கழிப்பிடம் கட்டப்பட்டு, 4 ஆண்டுகள் கடந்தும் கழிப்பிடம் மூடியே வைக்கப்பட்டிருந்த நிலையில் மாற்றுத் திறனாளி மாணவிகள் பெரும் அவதிப்பட்டு வந்தனர். எனவே, இம்மாற்றுத்திறனாளி மாணவிகளின் துயரை போக்க மூடி வைத்த கழிப்பறையை பேரூராட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு மாற்றுத்திறனாளி மாணவிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மேலும், இந்நிகழ்விற்கு பள்ளியில் பயிலும் மாணவிகள், மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் இப்பேரூராட்சிக்கு வரவேற்பும் மற்றும் நன்றியையும் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த இடம் குளம் வகைப்பாட்டை சார்ந்ததாக இருந்தாலும், பள்ளியைச் சுற்றி தண்ணீர் ஏதும் தேங்குவதில்லை. இந்த இடத்தினை சுற்றி அதிக அளவில் குடியிருப்புகள் அமையப்பெற்றுள்ளது என்ற அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்கு சொந்தமான புல எண். 252/2ல் குளம் வகைப்பாட்டிலுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கழிவறைகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் கட்டியுள்ளதாக புகார் தெரிவித்துள்ளதை மனுதாரரின் முறையீட்டு மனு மூலம் அறிய வருகிறது.

மேற்காணும் புகார் குறித்து ஏற்கனவே மனுதாரர் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு மனு அளித்திருந்தார். அதனை தொடர்ந்து மேற்காணும் புல எண். 252/2 குளம் வகைபாடு நிலத்தில் ஆரணி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தினரால் பள்ளிக்கு வெளியே ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கழிவறை கட்டுமானங்களை வருவாய்த் துறை உதவியுடன் அகற்றிட ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரால் ந.க.எண். 401/2022/அ1 நாள் 05.06.2023 மூலம் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படும் தேதியை நிர்ணயம் செய்யக்கோரி பொன்னேரி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து, 27.07.2023 அன்று ஆக்கிரமிப்பு அகற்றும் பணியை மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்ட நிலையில், பொன்னேரி வட்டாட்சியர் அலுவலக நிர்வாகக் காரணங்களால் அன்று (27.07.2023) ஆக்கிரமிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை என்பது ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து, பொன்னேரி வட்டாட்சியரின் மனு எண். 11868469/2025 நாள் 04.07.2025ல் புகாராக தெரிவிக்கும் புல எண். 252/2ல் குளம் வகைப்பாட்டில் கட்டப்பட்டுள்ள கழிவறைகளையும், கழிவறை தொட்டிகளையும் ஆரணி பேரூராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளதாக தெரிய வருவதால் மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றி அதன் விவரத்தினை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு பொன்னேரி வட்டாட்சியர், ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொண்டுள்ளார் என்பதை வட்டாட்சியரின் 04.07.2025 நாளிட்ட கடிதம் மூலம் தெரிய வருகிறது.

இந்நிலையில் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்காணும் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் முறையீட்டு மனு சமர்ப்பித்துள்ளார்.

மேற்காணும் புகார் குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 252/2ஆனது இப்பேரூராட்சி மன்றத்தால் 23.11.1990-ல் நடைபெற்ற பொருள் எண். 68-ல் பள்ளிக்கு தேவையான மனை நிலம் பேரூராட்சிக்கு சொந்தமான சர்வே எண். 252-ல் உள்ள நக்கலக்குண்டா (நரிக்குளம்) என்ற புறம்போக்கு நிலத்தில் 1.43 ஏக்கரில் உள்ளதை மேற்படி பள்ளிக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டு

மேற்படி பள்ளியின் அமைப்புக் குழு செயலர் அவர்களின் 18.10.1990-ல் குறிப்பிட்ட கடிதம் பார்வையிட்டு முடிவு செய்தல் என தீர்மானம் கொண்டுவரப்பட்டு seen and sanctioned என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் அறிய முடிகிறது.

இந்நேர்வில், புல எண். 252/2, 'குளம்' என்ற நீர்நிலை வகைப்பாட்டினை சார்ந்தது என்பதாலும் 04.07.2025 நாளிட்ட கடிதத்தில் பொன்னேரி வட்டாட்சியர் குளம் வகைப்பாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து, பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரம் தெரிவிக்குமாறு கோரப்பட்டிருப்பது தெரிய வருவதாலும், நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்த உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டும் மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள புல எண். 252/2ல் குளம் வகைப்பாட்டில் உள்ள இடத்தில் கழிவறைகளையும், கழிவறை தொட்டிகளையும் ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக தெரிவிக்கும் புகார் குறித்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆரணி முதல்நிலை பேரூராட்சிடமிருந்து பெற்று, ஆவணங்களை பரிசீலித்து அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிய உத்தரவு வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M.S. சேஷாத்ரி,
எண். 366, பஜார் தெரு, பொன்னேரி வட்டம், ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம் 601 101.
2. செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம் 601 101.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/4/26
செயலாளர்
09/4/26.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032